
# தெய்வமும்
# தெய்வீக சக்திகளும்

முதல் பாகம்



ஆசிரியர்

**தன்-ஐந்நிலை**

**நூல்** : தெய்வமும் தெய்வீக சக்திகளும்

**ஆசிரியர்** : தன்-ஐந்நிலை

**உரிமை** : ©ஐந்நிலை பதிப்பகம்

©i-Nilai Pathippagam

No Part of this book may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of the publisher, except as provided by the Indian Copyright Law.

**முதற்பதிப்பு** : ஆகஸ்டு, 2020

**பக்கங்கள்** : 80

**விலை** : ₹120

**பதிப்பாளர்** : ஐந்நிலை பதிப்பகம்,
1/59 கிருஷ்ணா நகர்,
3-ம் தெரு, விருகம்பாக்கம்,சென்னை - 600 092

**ஈ-மெயில்** : **inilaipathippagam@gmail.com**

**வடிவாக்கம்** : குக்கூ இமேஜஸ், சென்னை.

**அச்சாக்கம்** : தூரிகை பிரிண்ட்ஸ், சென்னை.

## ஆதி விநாயகர் வணக்கம்

**"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே"**

**- திருமூலர் எழுதிய திருமந்திரம்.**

ஐந்து நிலைகளில், பிறைச் சந்திரன் போல் என் **மனதை** வைத்து, நான் உடலால் செய்யும் காரியங்களால் பெறும், யானை போன்ற பலமிக்க **ஞானத்தை** (முகக் குறியீடாக வைத்திருக்கும்), போற்றுதற்குரிய **மெய்யுணர்வாகிய** சிவபெருமானின்(நந்தி) மகனே, நீயே ஒளிவிடும் **விழிப்புணர்வாக** இருக்க உன்னுடன் தொடர்பு கொள்கிறேன்.

## குரு வணக்கம்

**"பரபிரம்ம ஆரம்பம் பராசக்தி மத்யமம்**
**அஸ்மத் ஆச்சார்யப் பரியந்தம்**
**வந்தே குரு பரம்பரா"**

பரபிரம்மத்திலிருந்து வருகின்ற அனைத்து அறிவையும் பராசக்தியின் வழியாகக் கற்றுத் தேர்ந்த குருமார்கள் மற்றும் அந்த ஞானத்தை நமக்குக் கற்றுத்தரக்கூடிய தற்போதைய குரு வரை உள்ள அந்த நீண்ட பரம்பரையை வணங்குவோம்.

# பொருளடக்கம்

1. தெய்வம் என்பது எது?.....01
2. சனாதன தர்மம்.....09
3. முக்கோணம் கூறும் உண்மைகள்.....15
4. சிவ தத்துவம்.....20
5. சக்தி தத்துவம்.....21
6. விஷ்ணு தத்துவம்.....23
7. கணபதியின் பின்னணி.....25
8. சாஸ்தாவின் பின்னணி.....27
9. ஸ்கந்தாவின் பின்னணி.....29
10. ஷட்கோண எந்திரம்.....33
11. மூன்று பீஜங்கள்.....38
12. கால – அளவு – உருவத் தத்துவம்.....43
13. மனிதனும் தெய்வமும் – ஓர் அறிவியல் விளக்கம்.....52

01

# தெய்வம் என்பது எது?

குருவுக்கும் சிஷ்யருக்கும் இடையேயான உரையாடல் மூலம் தெய்வத்தைப் பற்றியும் தெய்வீக சக்திகளைப் பற்றியும் உணரலாம்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள வார்த்தைகளை வைத்துக் கொண்டு சிவம்(சைவம்), விஷ்ணு(வைணவம்), சக்தி(சாக்தம்) என்று தற்போது அழைக்கப்படும் பெயர்களை மட்டும் வைத்துப் புரிந்து கொள்ளாமல் அதன் ஆதித் தன்மைகளை உணர்ந்து கொள்ள முயல்வோம். அப்போது தான் உண்மைத் தன்மை விளங்கும்.

**சிஷ்யர் :**
குருவே, தெய்வம் என்பது எது?



**குரு :**


அந்த 'தெய்வம் என்பது எது?' என்று கேட்பது, 'தண்ணீர் என்பது எது?' என்று பனிக்கட்டி (Ice Cube) கேட்பது போலாகும். பனிக்கட்டிகள் எல்லாம் சேர்ந்து "கடல் என்றால் என்ன?, தண்ணீர் என்றால் என்ன?" என்று உரையாடுவது போல உள்ளது.
ஒரே கடல் நீர் தான் எண்ணற்ற பனிக்கட்டிகளாகத் தோன்றி மாறி–மறைகிறது. அதுபோல ஒரே கடவுள் தான் இந்த பிரபஞ்சமாக இடைவிடாது தோன்றியும் மாறியும் மறைகிறதுமாக உள்ளது.

**சிஷ்யர் :**

விஞ்ஞானம் இதை மூடநம்பிக்கை என்று தானே சொல்கிறது?

**குரு :**

அது பார்வையின் கோணத்தைப் பொறுத்தது. விஞ்ஞானம் வெளியே நோக்கும் (Research) போது, மெய்ஞானம் (Selftual Search) உள்ளே பார்க்கிறது.




**சிஷ்யர் :**

சற்று விளக்கமாகச் சொல்லவும்.

**குரு :**

கடலின் மேல் மிதக்கும் எண்ணற்ற பனிக்கட்டிகள், தனக்கு சுற்றிலும் உள்ள பனிக்கட்டிகளைப் பார்க்கும் போது (ஆராய்ச்சி) கடலைக் காண முடிவதில்லை. ஆனால் ஒரு பனிக்கட்டி தன்னைப் பற்றி முழுவதும் தெரிய முற்படும் தேடலில் தான் மிதக்கும் கடலைப் பற்றிய தெளிவு வருகிறது. இந்த சுய பரிசோதனையாகிய தனக்குள் சென்று தேடுவதையே கடவுள் (கட + உள் = கடந்து உள்ளே செல்லுதல்) என்று சொல்கிறோம்.

**சிஷ்யர் :**

விஞ்ஞானத்தால் முடியாதது என்ற ஒன்றை எப்படி மெய் ஞானத்தால் உள்நோக்கிப் பார்க்க முடியும்?



**குரு :**

அதை எப்படி உணர்வது என்பது தான் வாழ்க்கையின் லட்சியம். விஞ்ஞானம் என்பது தெய்வீக சக்தியை (பனிக்கட்டி) மட்டும் கருவிகளால் அளந்து அதை மனித வாழ்க்கையின் உடல் சுகத்திற்கு மட்டும் பயன்படுத்துவது. அதைத்தான் தொழில்நுட்பம் (Technology) என்று கூறுகிறோம். மெய்ஞானம் என்பது தெய்வத்தையும் (கடல் தண்ணீர்) தெய்வீக சக்திகளையும் (பனிக்கட்டி) மனிதர்களுக்கு மட்டுமல்லாமல், எல்லா உயிருள்ள உயிரற்ற ஜீவன்களுக்கும் சமநிலையில் பயன்படுத்த உதவுவது.

**சிஷ்யர் :**

குருவே, தெய்வம் மற்றும் தெய்வீக சக்திகள் பற்றி விளக்கிக் கூற இயலுமா?

**குரு :**

நாமும் நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் இந்தப் பிரபஞ்சமும் எதிலிருந்து உருவானதோ அதுவே தெய்வமாகும்.

**சிஷ்யர் :**

தெய்வீக சக்தி என்பது எது?

**குரு :**

தெய்வீக சக்தி என்பது ஆற்றலாகும் (Form of Energy).

உதாரணமாக, பனிக்கூழ்(Ice Cream) செய்யப் பனிக்கட்டி பயன்படுத்தப்படுகிறது. அதே பனிக்கட்டி ஒரு பொருளைக் கெடாமல் பாதுகாக்கப் பயன்படுகிறது. கத்தி போன்ற கூர்மையான பனிக்கட்டியைக் கொண்டு ஒரு பொருளை உடைக்கவோ குத்தவோ செய்ய முடியும். இவையெல்லாம் நீரினால் ஆன பனிக்கட்டியின் ஆற்றல்கள் தான். அதாவது ஒரே ஆற்றல் வெவ்வேறு செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

ஆற்றலுள்ள பனிக்கட்டியைப் பயன்படுத்திக் கொண்டு அதனுள் இருக்கும் தண்ணீரை இழிவுபடுத்துவது எப்படி அறியாமையோ அதேபோல், தெய்வீக சக்திகளைப் பயன்படுத்திக் கொண்டு தெய்வத்தைத் தூற்றுவதும் அறியாமையே ஆகும். மேலும் விளக்க வேண்டுமென்றால், தற்போது நாம் பயன்படுத்தும் அனைத்துத் தொழில்நுட்பம் (Technology) சார்ந்த பொருட்களிலும் மனிதனின் (பனிக்கட்டி) அளப்பரிய அறிவாற்றலே பெரும் பங்கு வகிக்கிறது.



ஆனால் அந்தக் கண்டுபிடிப்புகளுக்கு ஆதாரமாக விளங்குவது நமக்குப் பெருங்கொடையாகக் கிடைத்துள்ள இயற்கைவளங்கள் (கடல் தண்ணீர்) ஆகும் என்பதைப் பனிக்கட்டிகளான மனிதர்கள் நினைவில் நிறுத்த வேண்டும்.

**சிஷ்யர் :**

ஆனால் வேதவழிச் சமயத்தில் ஏன் பல்வேறு தேவதைகள் தெய்வசக்திகளாக உருவகம் ஆகி வணங்கப்படுகிறார்கள்?

**குரு :**

ஒரே தண்ணீர் தான் பல பனிக்கட்டிகளாக மாறுகிறது. அதுபோல் இருப்பது ஒரே தெய்வம் தான். ஆனால் அதுவே பல சக்தி ஆற்றல்களாக (தெய்வீக சக்திகளாக) உருமாற்றம் அடைகிறது.

அந்த தெய்வீக சக்தியை உணர ஐந்து நிலைகளாகக் கற்பதால் அது தெளிவாகும். அதைத் தான் **பஞ்சபூதங்கள்** என்று நம் முன்னோர்கள் பகுத்து அறிவைத் தந்திருக்கிறார்கள். பரந்து விரிந்த பஞ்சபூதங்களைத்




12


# கால-அளவு-உருவத் தத்துவம்
## (Time-Space-Form)

**உ**லகத்திலுள்ள அனைத்துப் பொருட்களுக்கும் ஒரு கால அளவும் (Time Energy), மூன்று இட அளவுகளும் (Space Energy) உள்ளன. கால அளவு என்பதைக் கண்களால் காண இயலாது.

விஷ்ணுவின் கோலங்களை அளவுகளால் குறிப்பிடுகிறோம். அவை



கிடத்தல் – நீளம் (Length)



நிற்றல் – உயரம் (Height)



இருத்தல் – அகலம் (Width)

## சான்றாதாரப் புத்தகங்கள்

1. **01 Vibration:** The Ultimate Pattern – 2020 by Selftual
2. முனைவர் **திரு.பிரதீப் சல்லியில்** எழுதிய Journey to the Source: Decoding the Matrix (2004)
3. UNI5 website: www.rightawareness.com

## புத்தகம் உருவாக உதவி செய்தவர்களுக்கு நன்றி

**Selftual Sakthi – Author**

**Dr. Pradheep Chhalliyil, Ph.D – Editor**

Dr. Pradheep is a Scientist, Founder of a biotechnology company, an author, an educationalist and a motivational speaker as well.

**Kanagulakshmi Ranjeeth – Editor & Illustrator**

Kanagulakshmi has a Masters in Computer Applications. She works as a Computer Programmer and also an Organic farmer.

**Dr. Manoj Kumar AS, Ph.D – Illustrator (Cover Page)**

Manoj is a Biotechnology research scientist and an artist as well.

**Dr. Madeswaran Mohanasundaram, Ph.D – Illustrator**

Madeswaran has Biochemistry degree, Ph.D in Tamil and director of Uni5 Schools. He is an Educationalist and an artist as well.

**Priya K. Chhalliyil – Illustrator**

Priya has a Masters in Computer Applications. She is also an entrepreneur and fashion designer.

**Abheetha Mallya – Illustrator**

Abheetha is a Student.



**ஐந்நிலை பதிப்பகம்** – மனித மனமானது எப்போதும் ஒரே விதமான சிந்தனையில் சிக்குண்டு அதைப் பற்றிய யோசனையிலேயே திளைத்திருப்பதயே மிகவும் விரும்பும். அந்த சிந்தனை மண்டலத்தில் அதுவே சிறை கொள்கிறது. அந்த மனதை விடுவிக்க ஒரே வழி அந்த சிந்தனை மண்டலத்திலிருந்து விடுவித்து அதை விட உயர்ந்த சிந்தனை மண்டலங்களுக்கு எடுத்துச் செல்வதே ஆகும். மனதை ஐந்நிலைகளுள்ள சிந்தனை மண்டலத்திற்குக் கொண்டு செல்வதன் மூலம் கடைசியில் அந்த ஐந்தாவது நிலையிலுள்ள சிந்தனை மண்டலத்திலிருந்து விடுபடுகிறது. அவ்வாறு விடுபடும் போது தான் இந்த வாழ்க்கைச் சக்கரத்திலிருந்தும் விடுபட முடியும். அதற்கான வழிகாட்டல்களை வழங்குவதே ஐந்நிலை பதிப்பகத்தின் லட்சியம் ஆகும். இது சாதி, மதம், இறை நம்பிக்கை உள்ளவர்கள் மற்றும் இறை நம்பிக்கை அல்லாதவர்கள் என எந்த பேதமுமின்றி அனைவருக்கும் பொதுவான உண்மைகளை எடுத்துரைத்து அனைவரும் மகிழ்ச்சியான நிம்மதியான வாழ்க்கை வாழ வழிகாட்டும்.

*இந்நூல் ஆன்மீகம் பற்றிய அஞ்ஞானமகற்றி மெய்ஞானம் அருளுகின்ற பொன்னான நூல்!
*ஆன்மீக சந்தேகங்களுக்கு அறிவியல் விளக்கங்கள் அடங்கிய அற்புதப் படைப்பு!
*அனைவரும் வாங்கிப் பயனுறுவதோடு அவசியம் கையோடு வைத்திருக்க வேண்டிய ஆன்மீகக் கையேடு!

– USSR **நடராசன்**
மேனாள் சோவியத் ரஷ்ய தூதரக உயரதிகாரி.

*இந்நூல் மிக அடிப்படையான ஆன்மீக ஐயங்களை நீக்குகிறது. குறிப்பாக அறுவகைச் சமயங்கள் என்பது உண்மையில் என்ன என்ற விளக்கத்தை அறுகோணக் கட்டமைப்பின் மூலம் எளிமையான புரிதலை முன் வைக்கிறது. அதைப் புரிந்து கொள்ளும் போது இன்று சமூகத்தில் உள்ள சமயம் குறித்த பல்வேறு சர்ச்சைகளும் வேற்றுமைகளும் அவரவருள் தீர்க்கப்படும் என்பதில் ஐயமில்லை.

– முனைவர்.**மோ.மாதேஸ்வரன்,** கல்வியாளர்.

ஐந்நிலை பதிப்பகம்
www.rightawareness.com
978-0-9752586-3-7



₹120